செய்தி வெளியீடு எண்: 476 நாள் : 01.10.2015

# செய்தி வெளியீடு

## மூன்று காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் பதக்கங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1) திரு. கு. ராஜேந்திரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, தஞ்சாவூர் மாவட்டம், 2) திரு. சு. ராமமூர்த்தி, சிறப்பு உதவி ஆய்வாளர், புதுப்பட்டினம் காவல் நிலையம், நாகப்பட்டினம் மாவட்டம் அயல்பணி தனிப்பிரிவில் மற்றும் 3) திரு. ம. ராஜு, தலைமை காவலர் 1834, ஏரியூர் காவல்நிலையம் அயல்பணியில் மதுவிலக்கு அமலாக்க சிறப்புக்குழு, தருமபுரி மாவட்டம் ஆகியோருக்கு, கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக காந்தியடிகள் காவலர் விருதுகள் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன விருது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2016–ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதைப் பெறுபவர்களுக்கு பதக்கங்களுடன், பரிசுத் தொகையாக தலா ரூ.20,000/–மும் வழங்கப்படும்.

அபூர்வ வர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**